813

Registered No. M. 442.

सत्यमेव जयते

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MAY, 1919.] PRICE, 1 PIE.—விலை, க பை. [மேமீ, 1919.

14 JUN 1919 MADRAS

## "THE DAYS ARE EVIL."

## "நாட்கள் பொல்லாதவை."

(தொடர்ச்சி.)

பவுல் அப்போஸ்தலனும் அந்நாளைக்குறித்துப் பேசும்போது 1 தெசலோனிக்கேயர் 5. 4-ல் "சகோதரரே அந்நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத் தக்கதாக நீங்கள் அந்தகாரத்தி லிருக்கிறவர்கள் அல்லவே", 6-ல் "ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறதுபோல் நாம் தூங்காமல் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களா யிருக்கக்கடவோம்" என்கிறார். பேதுரு அப்போஸ்தலனும் 2 பேதுரு 3. 10-ல் "கர்த்தருடையநாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்", 12-ல் "தேவனுடையநாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள், 14-ல் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" எனப்போதிக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்திலும் திருக்காட்சியடைந்த யோவானும், வெளி. 6. 15–17-ல்" பூமியின் இராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு பர்வதங்களையும் கன்மலையையும் நோக்கி, நீங்கள் எங்கள்மேல் விழுந்து சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள். அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது. யார் நிலைநிற்கக்கூடும். என்றார்கள்" என்கிற சத்தத்தைக்கேட்டு அந்த நாளைக்குறித்து இவ்வாறு கூறுகிறார்.

படிப்பினை.—இப்பவும் நாம் "நாட்கள் பொல்லாதவைகளா" யிருக்கிறதென்கிற உண்மையைப் பல விதமாய் ஆராய்ச்சிசெய்து பார்த்துவந்தோம். பூலோக சம்பவங்களும், திருச்சபையின் காரியங்களும் கிறிஸ்தவர்களின் ஜீவியமும் வேதோபதேசமும் "நாட்கள் பொல்லாத"வைகளாய்த்தா னிருக்கின்றனவென்று ரூபகப்படுத்துகின்றன. இது அதிக நடுக்கத்தையும், பயத்தையும் பிரமிப்பையும் பிறப்பிக்கக்கூடியதே. காலஸ்திதி இவ்வாறு ஆனதற்கு தேவன் காரணரென்று புறமதஸ்தர் சொல்லும்வண்ணம் நாம் சொல்லாது அப்பெரும் பாதகத்துக்குத் தப்பி நாமே காரணரென்று உணர்ந்து ஒத்துக்கொள்வது தேவாவி நம்மில் செய்கிற நற்கிரியைக்கு அழகும், நமது மனமாறுதலுக்கு லக்ஷணமுமாம். காலபலனாக இத்தோஷங்கள் நேரிடாமல், விபரீதமான விஷயங்களின் பலனாக "நாட்கள் பொல்லாததாயிருக்கின்றன. எல்லாத் தீமைகளையும் தடுத்தாளும் தேவன் இப்பொழுதுங்கூட வல்லமையாய்க் கிரியைசெய்யச் சித்தமுள்ளவராகவேயிருக்கிறார். ஆனால் தேவனுடைய உடன் ஊழியர்களாகிய நாம் தோஷத்திற்கு ஏதுவாகிய மாம்ச இச்சையையும், கண்களின் இச்சையையும், ஜீவனத்தின் பெருமையாகிய உலகத்திலுள்ளவைகளையும் ஒழித்து, ஆவியின் சிந்தையுள்ளோராகிப் பரிசுத்த ஜீவியம்பண்ணி சுவிசேஷ ஊழியத்தை உலக ஆதாய ஜீவனமாகப் பாவியாமல் சுத்த சுவிசேஷப் பிரசங்கிகளும், மந்தைக்கு மாதிரிகளான சபையின் மேய்ப்பர்களும் மூப்பர்களும் ஆடுகளுமாயிருப்போமாகில், இப்பொல்லாத நாட்கள் நமக்கு சாபத்திற்கும் நித்திய நரகத்திற்கும் ஏதுவாய் முடியாது. ஆகையால் நாம் எவ்வித ஆலஸ்யமும் செய்யாமல் இந்நாட்களின் தன்மையை அறிந்து உணர்ந்து, தீங்கைத் தடுத்து நன்மையை விளையச்செய்யும் நமது ஆண்டவரை உத்தம மனஸ்தாபத்தோடும், உறுதியான தீர்மானத்தோடும், மாயமற்ற விசுவாசத்தோடும் வழிபடுவோமானால், சாபம் ஆசீர்வாதமாகவும், பயம் துக்கம் சந்தோஷமாகவும், தேவக்கோபம் நித்திய சமாதானமாகவும் மாறும். சபையையும் ஊழியத்தையும் காத்துக்கொள்வோம். நாட்கள் பொல்லாதவைகளானதற்கு நாமும் நமது அசத்தான கிரியைகளும் காரணமானதுபோல் நாட்கள் நலமானவைகளாகிறதற்கு நாமே தேவ அருளால் காரணமாகக் கூடுமென்கிறதை உறுதியாய் நம்பி, சென்ற நாட்களின் ஜீவியத்திலும் ஊழியத்திலுங்கண்ட தோஷங்களை நினைத்து அங்கலாய்த்துத் துக்கிக்கிறதோடு இதுமுதல் தேவ ஒத்தாசையை முன்னிட்டு ஆவியானவருக்கு முற்றிலும் கீழடங்கி நல்ல போராட்டத்தில் நிலைகொண்டு முயற்சிப்போமாக. கர்த்தர் தாம் தமது நித்திய ஆவியானவரைத் தந்து வழி நடத்துவாராக. ஆமென்

## GOLDEN OPPORTUNITY.

## நற்காலம்.

காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள் எபே. 5. 16.—நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள் என்கிறார். (அப்போஸ்தலனாகிய பவுல்) நமக்குத் தவணையாகவும் தாலந்தாகவும் கிடைத்திருக்கிற காலத்தைக் கைசோரவிடாமல் சரியானபடி பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். தருணம் தப்பினால் மரணம் என்பதுபோல் கிடைத்திருக்கும் காலம் கிருபையின் காலம் என்றெண்ணி விழிப்போடும் சுறுசுறுப்போடும் இருந்து இக்காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும். இது தவணையின் காலம் என்றும் எச்சரிப்பின் காலமென்றும் மதித்து சொஸ்த புத்தியுள்ளோராய் சர்வ ஜாக்கிரதையோடிருக்கவேண்டியவர்களானதால் காலத்தின் தன்மையையும் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும் விதத்தையும் சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

I. காலத்தின் தன்மை.—இது கடந்த காலமுமன்று, வருங்காலமுமன்று, இது நமது தற்காலமாகிய நிகழ்காலமே. இந்நிகழ்காலங்கூட சீக்கிரமாய் பறந்து போகக்கூடியது. நாமும் கடந்து போகிறவர்கள். இன்றுதான் நம்முடையது, நாளையோ எமனுடையதா யிருக்கக்கூடும். ஆகையால் காலஹரணம் பண்ணாமல் நமக்குத் தவணையாகவும் தாலந்தாகவும் எச்சரிப்பாகவும் கிடைத்திருக்கும் இந்நிகழ்காலத்தை சத்தான பிரயோஜனமாக்கிக் கொள்ளும்படி காலத்தின் தன்மையை அறிந்துகொள்வ தவசியம். இது கிருபையின் காலமாகிய சுவிசேஷத்தின் நற்காலம், சமுசாரிகள் காலமறிந்து காரியத்தை நடத்துகிறதுபோல நாமும் சுவிசேஷ காரியத்தை அறிந்து உணர்ந்து கிருஷித் தொழிலாளியைப்போல் சமயமறிந்து கவனமாய் நடந்துகொள்ளவேண்டும். காலத்தின் தன்மையைப் பார்த்தாலோ கவலையற்றிருப்பதற்கு இது சமய மல்லவென்று தோன்றும். உலகத்தம்பிரானாகிய அந்தகார லோகாதிபதி தனது சைந்நியத்துடன் வேலையை வெகு மும்முரமாய்ச் செய்ய எத்தனித்து கங்கணம் கட்டிக்கொண்டு திருடனைப்

போல வெகு ரகசியமாயும் தந்திரமாயும் வட்டமிட்டுக்கொண்டு திரிகிறான். ஆகையால் தேவ ஊழியர்களும் அடியார்களுமாகிய நாம் விழித்து எழுந்து காலூன்றி நின்று எதிர்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இக்காலமானது:—யுத்தகாலமென்றும் சொல்லலாம் Eph. vi: 10. 16:

1. விதைப்பின் காலம்
2. நடவின் காலம்
3. அறுப்பின் காலம்

என்று உணர்ந்து, அயர்ந்து நித்திரை செய்கிறதை விட்டு எழுந்து காரியத்தில் கண் என்பதற்கிசைய விதைக்கிறவர் விதைப்பாட்டிலும், நடுகிறவர் நடவிலும், அறுக்கிறவர் அறுப்பிலுமாக கவனத்தைச் செலுத்தி சுறுசுறுப்பாயிருத்த லவசியம்.

## I. விதைப்பின் காலம்.

1. விதைப்பின் காலம்.—ஒவ்வொன்றிற்கும் ஒருகால மிருக்கிறதென்று சாலோமோன் ஞானி சொல்லியிருக்கிறார். இயற்கையும் நமக்கு போதிக்கிறது. நம்மிலே சிலரை விதைப்பாளிகளாக நியமித்திருக்கிறார். நாம் விதைக்கவேண்டியது சுவிசேஷமென்பது நமக்குத் தெரியாததல்ல. விதைக்கவேண்டிய காலத்தில் சற்று அசதியாயிருப்போமாகில் அறுப்பின் காலம் வரும்போது நாம் கண்ணீர் சொரியவேண்டியதாகும். எஜமானின் அதிருப்திக்கும் ஆளாவோம். சாதாரணமாய் நமது நாட்டுப்புறத்து சமுசாரிகள் காலமறிந்து பயிர்செய்யவேண்டுமென்றுரைப்பதை நாமறியாதவர்களல்ல. கர்மமே கண்ணாயினர் என்பதற்கிசைய விதைப்போர் தங்களுடைய விதைப்பாடு என்னும் கர்மத்தைச் செய்து முடித்தற்கு இதே காலம் என்று உணர்ந்து இரண்டு விஷயங்களையறிதல் அவசியம். அவைகள்:—

(a) விதைப்போனிடத்தில் விளங்கவேண்டிய இலட்சணங்களும்.

(b) விதைக்கவேண்டிய விதை யாதென்பதுமே.

(இன்னும் வரும்.)

# SAMUEL HEBICH OF MANGALORE

## சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

### நாலாம் அதிகாரம்

### மிஷன் வேலையும் தொந்தரவும்.

(தொடர்ச்சி.)

இவ்வித சந்தோஷ சந்தர்ப்பங்களெல்லாம் இவரை அதிகமாய்த் தாழ்த்தும்படியே செய்தது. கர்த்தர் அவருக்குச்செய்த நன்மைகளுக்காக நன்றியறிதலான ஆவியோடு அவர் எழுதுகிறதாவது: நாங்கள் தொடரும் வழிகள் களைப்பும் நெருக்கமுமாயிருந்தாலும், நாங்கள் மோக்ஷத்தையே நாடிப்போகிறோம் என்று பார்க்கும்போது எங்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்குகிறது. நான் செய்யவேண்டிய இந்த பிரமாண்டமான வேலையில் நான் அடிக்கடி பார்ப்பது இருண்ட இரவே ஒழிய வேறில்லை, ஆனால் என் ஆண்டவர்போலே நான் முன்னேறி அதைக் கடக்கும்போது அந்த இருள் நீங்க ஒருபிரகாசம் தோன்றுவதால் நான் பெலனடைந்து ஜெயத்தின் மனோற்சாகத்தைப் பெறுகிறேன். அநேகர் என்னை "புத்திகெட்டவன் மத வைராக்கியன் என்றும், இன்னும் சிலர் 'பரிசுத்தன்' என்றும் சொல்லுகிறார்கள், ஆனாலும் என்ன? ஆவியானவரே நமது உள்ளத்தில் சாக்ஷிபகர்ந்து கர்த்தருடைய முத்திரையை பெற்றிராவிட்டால் மனுஷர்களுடைய தீர்ப்பினால் என்ன பிரயோசனம்? ஆண்டவர் என் அற்பமான முயற்சிகளை ஆசீர்வதிக்கிறார், அவைகள் என்னை அதிகமாய் தாழ்த்தும்படியே செய்கிறது." 1836ஆம் மேமீ 9உ-ல் முதற் தடவையாக நாலு பிள்ளைகள் அடங்கிய ஒரு பாடசாலையை மங்களூரில் ஏற்படுத்தினார்கள். கிறிஸ்து மார்க்கத்தில் பிரீதியைக் காண்பித்த திம்மப்பா என்றவர் முதல் உபாத்தியாயராக நியமகம் பெற்றார். ஹெபிக் ஐயரவர்கள் வீடு வீடாய்ச் சென்று பிள்ளைகளை மிஷன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி அதிகத் தாழ்மையாய் வேண்டிக்கொண்டார். மிஷனெரிமார், பிள்ளைகளைக் கிறிஸ்தவர்களாக்கி அவர்களை மாமிசம் தின்னும்படி பலவந்தம் செய்வார்களென்கிற ஒரு தீய எண்ணத்தைக் கிளப்பிவிட்டார்கள். ஆனால் இந்தத் தீய எண்ணம் நீடிக்கவில்லை. பாடசாலைக் கட்டடத்திலேயே ஆராதனையும் நடந்தேறியது. அதனால் ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கையுண்டானதினால் அந்த மறுமாதமே இன்னொரு பள்ளிக்கூடத்தைத் திறக்க ஏதுவானது. மேமீ 29உ-ல் கன்னடிய பாஷையில் ஒரு தேவ ஆராதனையை ஆரம்பித்தார். அவருடைய பெரிய வேலையில் அந்த மங்களூரில் இது ஒரு சின்ன ஆரம்பம். ஜூன்மீ முதல்ஞாயிற்றுக்கிழமையில் ஒரு ஆராதனை நடந்தது. அங்கே நாலு ஆங்கிலேயரும், மூன்று கன்னடியரும், இரண்டு தமிழரும், ஒரு போர்த்துகீஸ்காரனும் இந்த சின்ன சபையில் கூடிவந்தார்கள். அப்போது மூன்று மிஷனெரிமார் இவ்வாராதனையை நடத்திக் கர்த்தருடைய ராப்போசனத்தைப் பரிமாறினார்கள். அந்த அற்பத்தொகை அக்காலத்து மிஷனெரிகளுக்கு பெருக்கமாய்த் தெரிந்தது. கடைத்தெருவில் நடந்த பிரசங்கங்களுக்குப் பெருத்த ஆட்க்ஷேபனைகள் உண்டானது. இவர்கள் தெருக்களில் நின்று நற்செய்தியைக் கூறும்போது அங்கோர் பிராமணன் இவர்களைப் பார்த்து, 'நீங்கள் இங்கே வேண்டியதில்லை' என்று உரத்திக் கத்தினான். அப்போது ஜனங்கள் எல்லாரும் ஒன்றுகூடி மூர்க்காவேசம் கொண்டு "உங்கள் போதனைவேண்டாம், போங்கள் போங்கள்" என்று கத்த ஆரம்பித்தார்கள். அதன்பிறகு சுவிசேஷத்தைக் கூறும் அவர்கள்மேல் கற்களையும் சாணியையும் எறிந்தார்கள். அதையெல்லாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு போலீஸ்காரனை ஐயரவர்கள் பார்த்து, நீ இந்த இடத்தில் இப்படிப்பட்ட தாருமாறுகள் உண்டாகாதபடிக்கு அவைகளை ஒழுங்குப்படுத்துவது உன் கடமை என்று அவனை எச்சரித்தார். இவ்வித கலகங்களை போலீஸார் காணும்போதெல்லாம், அவைகளை நிவிர்த்திக்க வேண்டுமென்று மாஜிஸ்றேட் ஆண்டர்ஸன் துரையவர்கள் கொஞ்சம் பயத்தோடேவே ஒரு கட்டளையைப் பிறப்பித்திருந்தார்; ஆனாலும், போலீஸார், அப்படியே செய்வார்களென்று யார் எதிர்ப்பார்க்கக்கூடும்? "உன்னைப் பிரசங்கம் செய்யும்படி சர்க்கார் உத்திரவுக்கொடுத்திருக்கிறார்களா வென்று அந்த மூர்க்க பிராமணன் கேட்டார். அதற்கு ஐயர் இல்லை. வானத்திற்கும், பூமிக்கும் கடவுளானவரே எங்களை இங்கே பிரசங்கம் செய்யும்படி அனுப்பினார் என்று சொன்னார். அதற்கு இன்னொரு பிராமணன் "ஹா ஹா வென்று சிரித்து, நாலு ஆணிகளைக்காண்பித்து இதினாலேதான் அந்தக் கடவுளை சிலுவையில் அடித்தார்கள்" என்று கேலியாய்ச் சொல்லித் திரும்பவும் சிரித்தார். அப்போ, இன்னும் பரிகாசக்கூட்டத்தார் எல்லாரும் ஒன்று சேர்ந்து அருகாமையில் வந்தார்கள். அப்போது ஹெபிக் ஐயர் பரிசுத்த கோபத்தோடும், தாபந்தத்தோடும் அவர்களை நோக்கி, "ஓ பிராமணர்களே, நீங்கள் விருதாவாய் ஜனங்களை ஏய்த்துத் திரிகிறவர்கள், நீங்கள் மனந்திரும்பிக் குணப்படாவிட்டால், தேவக்கோபம் உங்கள்மேல் வந்து உங்களை அழித்துப்போடும், நான் உங்களிடத்தில் சத்தியத்தைப் பேசுகிறேன் என்பதற்கு இந்த வானமும், பூமியும் சாக்ஷி. ஓ, பரிகாசக்காரரே; உண்மை வெளிப்படும் காலம் உங்களுக்கு வரும், அப்போது நீங்கள் விசனப்படுவீர்கள், நல்ல காலத்தை இழந்துபோனதால் உங்களுக்கு பிரயோசனமிருக்காது" என்று சொன்னார். மனந்திரும்பும்படி அழைக்கும் எரிவான வார்த்தைகளைக் கேட்ட அந்தப் பரிகாசக்காரர் அதிக வெட்கத்தோடே தங்கள் வளவுகளுக்குச் சென்றார்கள். அவர்களுடைய ஹிருதயத்தில் நன்றாய்ப் படவேண்டுமென்று அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலையைஏற்படுத்தினார்; ஆனால் அந்த முயற்சி அதிக பெலனடையவில்லை.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

# MILTON'S PARADISE LOST

## பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

### வேவுகாண்டம்.

"ஓபாவமே! வெட்கமும் அவமானமும் உன்னாலே யல்லவோ உலகத்திற் பிரவேசித்தன. கனத்தைக் கனவீனமாக்கி பரிசுத்தப் பிரியமிருக்கவேண்டிய விடத்தில், கபடமுந் தந்திரமுங் குடிகொண்டிருக்கச் செய்தாய். ஆதிமனிதரின் பேதமையையும் மாசற்ற தன்மையையுங் குலைத்து, அதிபாக்கியம் நிறைந்த நித்திய ஜீவனையும் அநர்த்தஞ்செய்தாயே."

நிர்வாண சகிதரான இருபேரும் [illegible]னையாவது தூதனையாவது பார்க்க அச்சப்படாமல் கைபிடித்து, மிகுந்த அந்நியோந்நிய நேசத்துடன் நடந்தனர். ஆதாம் எல்லா மனுப்புத்திரர்களிலும் அழகிய புருஷனும், ஏவாள் எல்லா மனுப்புத்திரிகளிலும் அழகிய ஸ்திரீயாயுமிருந்தனர். அத்தோட்டத்தின் சுகிர்தம் நிறைந்த வேலைகளைமுடித்து ஓர் சிறிய தடாகத்தினருகில் வந்தனர். அத்தடாகத்தினிருகரையிலுங் உசித கனிவர்க்க[illegible]ளைச் சுமந்த விருக்ஷங்களிருந்தன. இளங்காற்று வீசினது. அம்மரங்களின் நிழலில் சற்று நேரம் உட்கார்ந்து சுகித்து சந்துஷ்டி யடைந்து பிற்பாடு போசன பானாதிகளை உட்கொள்ள வாரம்பித்தனர். அவர்களின் ஆச்சிரமம் புஷ்பங்களாற் சமைக்கப்பட்ட மிருதுவான மஞ்சண மெத்தைக் கொப்பா யிருந்தது. இருபேரும் திவ்வியமான பழங்களையும், அப்பழங்களின் இனிய பருப்புகளையும் தின்று தேவாமிர்தம் போன்ற சுத்த சலத்தை இருகையினால் வாரிக் குடித்து மதுரமான சம்பாஷணை செய்து ஆனந்தக் கடலில் அமிழ்ந்தியிருந்தனர். பூமியின் நானாவித மிருகசாதிகளும் அவர்களைச் சுற்றிலும் அக்களிப்புடன் ஆரவாரித்துக் கொண்டிருந்தன. ஆம், பிற்காலத்தில் அவனுக்கு எதிரிகளுங் காண்டாமிருகங்களுமாய்த் திரும்பினவைக ளிப்போது அவன் பாதத்தண்டை நெடுஞ்சாங்கடையாய் வீழ்ந்திருந்தன. மிருகாதிகளுக்கெல்லாம் அரசனாகிய சிங்கம் கெர்ச்சித்து வல்லமையுடன் ஆர்ப்பரித்தும், ஆட்டுக் குட்டியோடே கொஞ்சிக்கொண்டிருந்தது. புலிகளுங் கரடிகளுஞ் சிவிங்கிகளும், ஓநாய்களும் அவர்களுக்குமுன் நடனஞ் செய்வதிலும் களியாட்[illegible]ளிலும் மிகுத்திருந்தன. பிர்மாண்டமான யானை தனது பளுவான மஸ்தகத்தையும் தும்பிக்கையையும் வளைத்து குமுறலிட்டு, அவர்களை அகமகிழச் செய்தது. எல்லாவற்றிற்குஞ் சமீபத்தில் தந்திரியாகிய சர்ப்பமிருந்தது. அதன் நீண்ட வுடலை அநேகச் சுருள்களாக்கி அவர்களின் கூந்தல்களோடு தன்னுடம்பைச் சுற்றிக்கொண்டு, சதிசர்ப்பனை நிறைந்த

தீயகுணம் வெளிப்படாவிதமாய் சகவாசஞ்செய்தது. இவைகள் தவிர மற்ற மிருகங்கள் யாவும் பசிய தரையின்மீது படுத்துக்கொண்டு ஆதித்தன் அஸ்தகிரியில் சேர்ந்து நக்ஷத்திரங்கள் வானமண்டலத்திற் றோன்றுமட்டுக்கும் அசைபோட்டுக்கொண்டிருந்தன. சமஸ்தமும் மங்களகரமாயிருந்தன. வேதாளம் இக்காட்சியைக்கண்டு பிரமைகொண்டு பிரக்ஞையிழந்து பேச்சுமூச்சற்றவனாயினன். ஆயினும், சற்று நேரத்துக்குப் பின்பு மூர்ச்சை தெளிந்து அடியில்வரும் வண்ணம் பிதற்றுகிறான்.

(இன்னும் வரும்.)

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**புதிய கலெக்டர்.** — செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் கனம்: ப்ரையன்ட் என்பவர் நீலகிரிக்கு மாற்றப்பட்டார். அவர் ஸ்தானத்தில் வந்திருக்கிறவர் I.C.S. பட்டம்பெற்ற கனம்: டாம்போ என்பவர்.

**ரௌலட்** —என்ற இந்திய கிரிமினல் சட்டம் வைசிராய் மகாசபையிலே நிலைவரப்படுத்தி ஆயிற்று. பலர் ஆட்சேபித்தும் பிரயோசனப்படவில்லை. ஆகிலும், இந்தியாவின் பல பாகத்தில் பெருத்த குழப்ப முண்டாகியிருக்கிறது.

**ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் திருமகன்.**—நமது சக்கரவர்த்தியின் மூத்தகுமாரனாகிய வேல்ஸ் ப்ரபுவுக்கு இத்தாலியர் தேசத்து அரசனின் மூத்த குமாரத்தியாகிய யோவந்தாள் என்னும் ராஜபுத்திரியை மணம்புரிய ஏற்பாடாயிருக்கிறதாக தெரிகிறது.

**ஆகாயவிமானத்தில் உயர்ந்த பிரயாணம்.**—காப்டன் லாங் என்பவரும் லெப்டனன்ட் ப்ளோஸ் என்பவரும் ஜனவரிமீ 1உ அன்று 66 நிமிஷம் 15 விநாடியில் 30,500 அடி உயரத்தில் பறந்து சென்றார்களாம். அவ்வளவு உயரத்திற்கு இதுவரைக்கும் யாரும் பறந்ததில்லை.

**புதிய கவர்னர்.** சென்னை ராஜதானிக்கு புதிதாய் நியமிக்கப்பட்ட கவர்னர் லார்ட் வில்லிங்டன் என்பவர் ஏப்ரல்மாதம் 9-ம் தேதி சென்னை வந்து சேர்ந்தார். கனம்: பென்ட்லண்ட் கவர்னர் மார்ச்சுமாதம் 29-ம் தேதி சனிக்கிழமை மாலை 4·55-க்கு சென்னையைவிட்டு ஜனனதேசமேகினார்.

**ஒரு ரூபாய் நோட்டுகள்.**—இந்த நோட்டுகள் அதிக சீக்கிரத்தில் அழுக்காய் விடுகிறதென்றும் சிலவற்றில் படிந்திருக்கிறஅழுக்கில் வியாதிக்கிருமிகளும் தங்க இடம் பெற்று தொத்து வியாதிகளைப் பரவச்செய்யுமென்றும் சர்க்காரார் அப்பேர்பட்ட நோட்டுகளை சேகரித்து கொளுத்திவிடுவது நலமென்றும் ஒருவர் தெரிவிக்கிறார்.

**விசேஷித்த குருட்டுப்பையன்.** — கல்கத்தா கலாசாலையிலே இவ்வருஷத்தில் ஒரு குருட்டுப்பையன் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் போனான். ஞொகேந்தர நாத்சென்குப்தா என்ற பெயருடைய இவன் கல்கத்தா குருட்டு ஸ்கூலில் படித்தவன். அட்சரமுதலியவைகளை தடவிப் பார்க்கும்படியான பரீட்சை காகிதமும் கணக்குப்போட அவனுக்கேற்ற பலகையும் கொடுத்ததுமன்றி எழுதுவதற்கு உதவியாக ஒரு சிறுவனையும் ஏற்படுத்தினார்களாம்.

**போன் பசு.**—இங்கிலாந்து சரேப்பட்டணத்தில் வசித்த ஒரு ஸ்திரி சுமார் 6 வருஷத்திற்குமுன் கன்றுக்குட்டிக்குத் தீனி கொடுத்துக்கொண்டிருந்தபோது தன் கலியாண மோதிரம் காணமல் போய்விட்டது. எங்கும் தேடியும் காணாததினால் அந்த கன்றுதான் தின்றிருக்குமென்று நினைத்தார்கள். கொஞ்ச காலத்திற்குப்பின் ஒரு கசாப்புக்காரன் அந்தப்பசுவைவாங்கி அறுக்கும்போது அந்தமோதிர ஞாபகம் வந்தது. தேடினான். குடலுக்குள் ஒரு மூலையிலே மறைந்திருக்கக் கண்டான்.

**நூதனச் சட்டம்.**—நார்வே தேசத்தில் இவ்வருஷ துவக்கத்தில் கலியாண விஷயமாய் ஒரு புதிய சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இருபதுவயதுக்குட்பட்ட ஆணும் பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண்ணும், அதிகாரிகள் அனுமதியின்றி வாழ்க்கைப்படக் கூடாதென்றும், ஒலைக்கூறுமுன் பிறந்தகாலத்தைக்குறித்தும் ஞானஸ்நானம் பெற்றதைக் குறித்தும் சர்ட்டிபிக்கட்டுகள் காட்டவேண்டுமென்றும், தங்களுக்கு குஷ்டமோ, வலியோ, வேறெந்த விதமான தொத்துவியாதியோ இல்லையென்று எழுதிக்கொடுக்க வேண்டுமென்றும், எழுதியிராத வியாதி ஏதாவது கலியாணத்துக்குப்பின் வெளிப்படுமானால் ஒருவருக்கொருவர் பிரிந்துகொள்ளலாம் என்றும் அந்த சட்டம் தெரிவிக்கிறது.

**நாயின் நற்புத்தி.**—இங்கிலாந்தில் வசித்துவந்த ஒரு குடியானவன் ஒருநாள் கட்டைகள் கொண்டுவரும்பொருட்டு 10 மைல் தூரமுள்ள ஒரு காட்டுக்குச் செல்லுகையில், அவனுடைய நாயும் உடன் சென்றதாம். அவன் கட்டைகளை வெட்டி வண்டியில் போட்டுக்கொண்டு திரும்புகையில் கூடவிருந்த நாயானது கெற்பமானதால் மூன்று குட்டிகளைப்போட்டதாம். நாயுக்குடையோன் அக்குட்டிகளை காட்டிலேயே எறிந்துவிட்டு நாயைமாத்திரம் வண்டியிலே ஏற்றிக்கொண்டு வீடுவந்து சேர்ந்துவிட்டானும், வீட்டையடைந்த அந்தநாயானது அன்றிரவே குட்டிகளின்மேல் வைத்திருந்த பாசத்தால் மூன்றுதடவை காட்டிற்குச் சென்று ஒவ்வொரு குட்டியாக கொண்டுவந்து தன்னிடம் சேர்த்துக்கொண்டதாம். அந்த நாளிரவில் மூன்றுதடவைக்கு 60 மைல் தூரஞ்சென்ற காரணத்தால் அதிக களைப்படைந்து அதன் குட்டிகளின் பக்கத்தில் படுத்தபடியே செத்துக்கிடந்ததாம்.

**இன்புளூவென்சா என்ற விஷஜுரம்.**—காால்வாத் என்ற வைத்தியசாஸ்திரி இஜ்ஜுரத்தைப்பற்றி லண்டன் பட்டணத்திலே உபந்நியாசித்தபோது இஜ்ஜுரம் ஸ்பானியாதேசத்திலுண்டாகாமல் கிளாஸ்கோ பட்டணத்திலுண்டாகிவரவர பிரான்ஸ்தேசத்து யுத்தகளத்தில்பிரவேசித்ததென்று சொன்னார். அதை தடுக்கும்படியான வழி வகைகளில் முகவலைத்துணி உபயோகிப்பது மெத்த அவசியமென்றும், குடைபிடிக்க வெட்கப்படாதவர்கள் முகவலை உபயோகிப்பதில் வெட்கமடைய அவசியமில்லையென்றும் எடுத்துரைத்தார். 1918வரு நவம்பர்மீ 30உகுள் இஜ்ஜுரத்தால் மாண்டவர்கள் சுதேசராஜ்யங்கள் தவிர பிரிட்டிஷ் இந்தியாவிலே 48,99,725 பேர் (ஜனத்தொகை 238,026,240) இதிலே சென்னை ராஜதானியில் மாத்திரம் 509,667 (ஜனத்தொகை 140,005,735) ஆக 1000 க்கு 12·7 பேர் இச்சுரத்துக்கு இரையாயிருக்கிறார்கள். இவ்வித ஜுரம் 1803, 1833, 1837, 1847, 1890–ம் வருஷங்களிலும் நஷ்டப்படுத்தியிருக்கிறது. ஆகிலும் சொற்பகாலத்திற்குள் பூலோகத்தின் அதிக பாகத்தை இவ்வளவு நஷ்டப்படுத்தியது கடந்த விஷஜுரமே.

**குஷ்ட வியாதி.** — இது விஷயமாய் கனம்: ப்ரான்ங் ஆல்டிரீவ் குருவானவர் சில விசேஷித்த குறிப்புகளை ஒரு பத்திரிக்கையில் எழுதுகிறார். குஷ்டரோகி ஒருவன் எந்த இடத்தில்போய் வசிக்கிறானோ அந்த இடத்தில்தான் அவ்வியாதி பரவுகிறதாம். சாண்ட்வுச்தீவுகளில் 1848வரு க்கு முன் ஒரு ரோகியுமில்லை. 1891 வருஷத்தில் அதே இடத்தில் 30 ஆட்களுக்கு ஒருவன் குஷ்டரோகியானான். நியுகலிடோனியா என்னுமிடத்தில் 1865 வருஷத்தில் ஒருவனிருந்திருக்க 1888 வரு-ல் அங்கே 4,000 பேர் குஷ்டரோகிகளானார்கள். தென்னிந்தியாவின் ஓரிடத்திலே 30 வரு-ல் 64பேர் குஷ்டரோகிகளாயிருக்கிறாகள். இந்தியாவில் பூர்வகால முதல் ஏற்பட்டிருக்கிற மத அனுஷ்டானங்களினாலே இந்த தேசத்திலே அவ்வியாதி அதிகமாய்ப் பரவ இடம் பெறாததாயிருந்தது. குஷ்டரோகிகளைப் பிரத்தியேகமாய் ஜீவிக்கச் செய்வதும் ரெயில்வே பிரயாணத்தில் அவர்களுக்கு இடம் கொடாமலிருப்பதும் அவசியமானதென்று அபிப்பிராயப்படுகிறார். இம்முறையை கையாடுவதினாலே நார்வேதேசத்தில் 1856 வரு-ல் லட்சத்திற்கு 191·3 வீதம் இருந்தது. 1910 வரு-ம் 13·5 க்கு குறைந்து விட்டதாம்.

**நீடிய ஆயுள்.**—டிப்பாாரி, நீனக் என்ற இடத்தில் ஒருவள் 121-வது வயதில் மரித்தாள். அவள் தலைமுறையில் 50 பேர் கடந்த யுத்தத்திற்கு போனார்களாம். அவர்களில் அநேகர் காயப்பட்டு இருவர் மரித்தார்கள். வயதில் இவள் விசேஷித்தவள் அல்ல. எப்படியெனில் 1904 வரு கல்கத்தாவில் 18-ம் பெங்காள ரெஜிமென்ட்டுக்கு சாப்லனாக இருந்தவர் தனது 130-ம் பிராயத்தில் ஆராதனை நடத்திவந்தார். ஹாண்றே ஸ்மிட் என்ற ஒரு ருஷியன் 1772 வரு-ல் பிறந்து 1796-ல் ரிவா ரெஜிமெண்ட்டில் சேர்ந்து உழைத்தான். 1908 வரு 136 ம் பிராயத்தில் ஜீவனோடிருந்தான். அட்ஜிரூப் என்ற ஒரு ருஷியன் 133-ம் பிராத்தில் கான்ஸ்டாண்டிநோபல் என்ற பட்டணத்திலே தோல்வேலை செய்துகொண்டிருந்தான். கோ–கா–னும் என்ற பெயருடைய ஓர் காட்டு இந்திய வீரன் 160-ம் பிராயத்திலே பூச்செட்சௌண்ட் என்ற தேசத்துக்கரைகளிலே சுற்றிக்கொண்டிருந்தான். ஐரோப்பியர் அவனை 200 பிராயமுள்ளவனென்று மதித்தார்கள். அவன் 2 அடி 5 அங்குல உயரமுள்ளவன் 50 பவுண் நிறையுள்ளவன். 1913 வரு ஜுலைமாதத்தில் டாக்டர் சோஸாய் என்ற ஒரு சீனன் நியூயார்க் என்ற பட்டணம் வந்து இறங்கினான். அவன் தனது வயது 145 என்றான். சில வருஷங்களுக்கு முன்னே மாண்டிரீல் என்ற பட்டணத்தில் ஒரு சீனஸ்திரி இருந்தாள், அவள் தனது சுயதேசத்தை விட்டு பிரயாணப்படும்போது 75 பிராயமென்றும் டெமாாரா என்ற பட்டணத்திலே 100 வருஷம் தங்கிவந்ததாகவும் சொன்னாள். 1912 வரு-ல் 100 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஐரோப்பாக்கண்டத்தில் 7,000 பேர்கள் இருந்தார்கள். அவர்களில் 3,888 பேர்கள் பல்கேரியா தேசத்தார்களாம்.

| யுத்த கப்பல்கள் நஷ்டம். | பலகப்பல்கள் | டன் |
|---|---|---|
| கிரேட்பிரிட்டன் | 198 | 550000 |
| ப்ரான்ஸ் | 56 | 110000 |
| இத்தாலியா | 29 | 76000 |
| ஜப்பான் | 9 | 50000 |
| அமெரிக்கா | 4 | 17000 |
| ஜெர்மெனி | 264 | 350000 |
| ஆஸ்டிரியா | 25 | 60000 |

## பஞ்சாங்கம்.

1919 மேஉ பஞ்சாங்கம்

⊙ பௌர்ணமி, 14, உ ● அமாவாசை, 29உ


| வாரம் | மே. | | | | | சித்திரை—வைகாசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 5 | 12 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 6 | 13 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 7 | 14 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 1 | 8 | 15 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 2 | 9 | 16 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 3 | 10 | 17 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 4 | 11 | 18 |

# MELLIN'S FOOD

TRADE MARK.

TRADE MARK.

## FOR INFANTS AND INVALIDS







மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினால் தொடாமல் செய்யப்பட்டது

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


### NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C.L.S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. T. SUBRAHMANYAM, Poonamallee.

### விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C.L.S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 9386